விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 317 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 15 சனிக்கிழமை (01.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## எம்.பிக்களுக்கு பாதுகாப்பு; பொலிஸ் தரப்பு இணக்கம்

14ஆம் பக்கம் பார்க்க


## இலவச சொப்பிங் பைகளுக்கு இன்று முதல் தடை விதிப்பு



07ஆம் பக்கம் பார்க்க

## தனியார் பேருந்திலும் பயணச்சிட்டை அவசியம்

மீறினால் பயணிகளுக்கு தண்டம்



13ஆம் பக்கம் பார்க்க

## பாதாள உலகினர் அரசியலில் கால்பதிக்க கடும் பிரயத்தனம்

### பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய போதைவஸ்து விநியோகஸ்தர்களும் பாதாள உலகினரும் தம்மைப் பாது காத்துப் பலப்படுத்திக் கொள்ள தேசிய அரசியலுக்குள் நுழைய

04ஆம் பக்கம் பார்க்க

## இரண்டு பேருந்துகள் மோதி கோர விபத்து

### நால்வர் பலி: 28 பேர் படுகாயம்

(குருநாகல்)

தொரடியாவப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன் 28 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுவெள்ளிக்கிழமை

15ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(நாவற்குழி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில்

15ஆம் பக்கம் பார்க்க

## - விசேட அதிரடிப் படையினரால் -

# யாழ்.பல்கலைக்கழகத்தில் துப்பாக்கி, குண்டுகள் மீட்பு

### கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் மேற்கூரையில் இருந்து ரி56 ரகத் துப்பாக்கி ஒன்றும் அவற்றுக்கான நான்கு மகசீன்கள், மூன்று சிறிய குண்டுகள், கிளைமோரை வெடிக்க வைக்கப் பயன்படுத்தப்படும் ரிக்னேட்டர், வயர்கள் மற்றும் காயங்களுக்கான மருந்துப் பொருட்கள், இரத்தக் கறையுடனான சாரம் என்பவை மீட்கப்பட்டுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)



## ஐந்து ரூபாயினால் குறைந்தது பெற்றோல் உயர்ந்தது சுப்பர் டீசல்

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைய இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் எரி

15ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு பரவ ஏதுவான சூழல் 14 பேருக்கு தண்டம் விதிப்பு

### பருத்தித்துறை நீதிமன்றம் அதிரடி

(பருத்தித்துறை)

டெங்கு நுளம்பு பரவும் சூழலைப் பேணிய ஆதன உரிமையாளர்கள் 14 பேருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்று தலா ஒரு இலட்சத்து 06 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## உருத்திரபுரத்து இளைஞன் பெலாரஸில் சுட்டுக்கொலை

### சட்டவிரோத பயணத்தால் ஏற்பட்ட அவலம்



(பெலாரஸ்)

சட்டவிரோதமான முறையில் பெலாரஸ் ஊடாக ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற இரு இலங்கையர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

04ஆம் பக்கம் பார்க்க

## வீதியில் கொட்டப்பட்ட மருத்துவக் கழிவுகள்

### யாழில் பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதி யொன்றில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டமை தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் மேலும்

15ஆம் பக்கம் பார்க்க

## - நெடுந்தீவுக் கடலில் -

## கடற்படை அதிரடி

### 185 கிலோ கஞ்சா மீட்பு



(நெடுந்தீவு)

போதைவஸ்துக்களை நாட்டிலிருந்து ஒழிப்பதற்கான போதையில்லாத நாடு என்ற செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 24 மணிநேரத்துக்குள் நெடுந்தீவு கடற்பரப்பில் 41 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பெருமளவு கஞ்சாவை கடற்படையினர்

04ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 30 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட இரு கடைகளும்
2. யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
3. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
4. யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
5. யாழ். கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
6. யாழ். A9 வீதியில் 10 பரப்புக் காணியும், 4 பரப்புக் காணியும்
7. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக்காணியும்
8. யாழ். விக்டோரியா வீதியில் வீதி முகப்புடன் 16 பரப்புக் காணியும், 8 பரப்புக் காணியும்
9. யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
10. யாழ். ஒஸ்மேனியா கொலிஜ்க்கு அண்மையில் ஒஸ்மேனியா வீதி முகப்புடன் 6 பரப்பில் அமைந்த புதிய வீடும் காணியும்

உடன் விற்பனைக்குண்டு.

(C-4231)

தொடர்பு : கனகசபை தர்மகுலசிங்கம்
இடம் : No.378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 723 2535

## சிற்ப கலாவாரிதி சற்குருநாதன் காலமானார்



ஈழத்தின் தலை சிறந்த ஸ்தபதி சிற்பகலாவாரிதி சற்குருநாதன் நேற்று முன்தினம் காலமானார்.

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சொந்த இடமாகக் கொண்ட சற்குருநாதன் மிகச் சிறந்த ஸ்தபதியாக விளங்கியதுடன் சித்திரத் தேர்கள், திரு மஞ்சங்கள் மற்றும் எழுந்தருளிக்கான வாகனங்களைச் செய்வதில் விற்பன்னராக விளங்கினார்.

இவரின் கலைப் பணியைப் பாராட்டி அவருக்கு பல விருதுகள் வழங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் இடம்பெறும். (ந)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர் திருமதி. வ. பவித்திரா அவர்களின் பாசமிகு மாமியார்

அமரர் சிவகுருநாதன் சிவகாமி

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்புடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6891)

ஆசிரியர் ஊழியர் நலன்புரிக்கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை



கனடா உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களை நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பேராசிரியர் உபாலி பன்னிலகே, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரி நாயக்க அவர்களும் பங்கேற்றிருந்தனர்.

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எமமிடம் உங்கள் மகளுக்கோ மகனுக்கோ மருமகளோ/ மருமகனோ என்ன வேண்டுமென்றாலும் உங்கள் விருப்பம் போல் விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும். மேலும் தோட்டம், சுயதொழில் புரியும் மணமகன்களுக்கும் சீதனம் குறைவாக வீடு இல்லாமல் இருக்கும் மணமகள்களுக்கும் மணமக்கள் உண்டு.

(5730)

தொடர்பு - வி.ஜெயந்தி T.P: 077 973 3183


## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதிலுடன் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
Sivasakthy Palan (Jeeva)
077 474 3499

(1686)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 25 . 11 . 1930

உதிர்வு 02 . 10 . 2025

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வேலுடையார் வீடு, பெரிய தோட்டம், கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

### வள்ளிப்பிள்ளை சிவக்கொழுந்து

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வேலுடையார் வீட்டு முற்றத்திலே
விரவிய காலங்கள் மலருதம்மா
கரவெட்டி மண்ணதன் ஜனன வாழ்க்கை
கொழும்பில் முடிந்திட காலன் செய்தான்.

எக்கணமும் எனை "அம்மா" என்றழைப்பீர்
அக்கணம் இனிவருமோ அம்மா
உம்முடன் இருத்தி மழலை மொழி பொழிவீர்
அம்மடி எப்படி கிடைக்கும் அம்மா

பேர்த்திகளை கட்டியணைத்து கதைகள் கூறும்
கரங்களின் கதகதப்பை எங்கே காண்போம்
உங்கள் வீடும் வெறுமையாச்சு அம்மா
நீங்கா நினைவுகளால் மனங்களும் புண்ணாச்சு

உங்கள் வியர்வையே எங்கள் உதிரம் அம்மா
உங்கள் தியாகங்களே எங்கள் வாழ்வு அம்மா
உங்கள் பாதையே எங்கள் ஒளி விளக்கு அம்மா
ஒரு பிறப்பு உண்டெனில் மீண்டும் வருவீர் அம்மாவாக

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், மருத்துவபீட மாணவர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று 01.11.2025 சனிக்கிழமை ஆன்மீக நிகழ்வுடன் கொழும்பில் நடைபெறும்.

வேலுடையார் வீடு,
பெரியதோட்டம், கரவெட்டி மத்தி.

உங்கள் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்

எகொடவத்த,
பொரலஸ்கமுவ, கொழும்பு.

(1684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண
# மரநடுகை மாதம்
## கார்த்திகை 1 - 30, 2025

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்**





**ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்**

(C-4229)

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
## TAMIL NATIONAL GREEN ORGANIZATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் உலகக்கிண்ணம்

## அவுஸ்திரேலியாவை வீழ்த்தி இந்தியா இறுதிப்போட்டிக்கு தகுதி



மகளிருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலியாவை அரையிறுதியில் வீழ்த்தி இந்தியாஅணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வரும் 13ஆவது மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 2ஆவது அரைஇறுதியில் இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயசுழற்சியில் வெற்றிப் பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி 49.5 ஓவரில் 338 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்திய தரப்பில் ஸ்ரீ சரணி, தீப்தி சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அவுஸ்திரேலியா நிர்ணயித்த 339 ஓட்டங்கள் மாபெரும் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 48.3 ஓவர்களில் 5 விக்கெட் இழந்து 341 ஓட்டங்களை பெற்று வெற்றி வாகைசூடி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இந்தியா சார்பாக அணித் தலைவி ஹர்மன் ப்ரீத்கர் 89 ஓட்டங்க்ளை பெற்றதுடன் ஜெமீமா ரொட்ரிகர்ஸ் ஆட்டமிழக்காமல் 127 ஓட்டங்களை பெற்று வெற்றியை உறுதிசெய்தார். இதற்கமைய இந்தியாவும் தென்னாபிரிக்காவும் நாளை ஞாயிற்றுக்கிழமை உலக சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)


## கிழவன்காடு கலாமன்றம்


காரைநகர் யாழ் கிளை

### பரிசளிப்பும் கலைநிகழ்வும் 02.11.2025

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் மற்றும் யாழ்கிளை இணைந்து நடாத்தும் வருடாந்த பரிசளிப்பும் கலைநிகழ்வும் 02.11.2025ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலாமன்ற ஸ்தாபகரும் தலைவருமாகிய திரு. சோதிநாதன் தலைமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா அவர்களும் அவரது பாரியார் யாழ்ப்பாண பல்கலைக்கழக மொழியியல் சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி. சிவராணி சிறிசற்குணராசா அவர்களும் பிரதம விருந்தினர்களாகவும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண நில அளவையாளர் நாயகம் காரை பொ.சிவானந்தன் அவர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் திரு. ஆறு. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களும் துறைசார் விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை வருகை வரிவுரையாளர் சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன் அவர்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வி. மைதிலி அருளையா அவர்களும் கௌரவ விருந்தினர்களாக கலாமன்ற கௌரவ உறுப்பினர் "கலைமாடக்கோன்" சிவஞானம் உமாதேவி தம்பதியினரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


நிகழ்வுகளாக கலாமன்ற ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு, மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவித்தல், முதனிலை மாணவர்களுக்கான பதக்கம், பரிசில், சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தல், கலைப்போட்டிகளில் வெற்றி பெற்ற கலாமன்றத்தின் 106 மாணவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தல், செல்வி திலக்சினி விமலதர்சன் குழுவினர் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் இந்திய மண்ணில் கலாமன்ற நடன ஆசிரியர் "நாட்டிய வித்தகன்" ஆனந்தகிருஸ்ணன் ஸ்ரீகாந்த் அவர்களுக்கு கிடைத்த "நிருத்திய சிரோமணி" விருதிற்கான கௌரவம் வழங்கல் என்பவற்றுடன் கலாமன்ற மிருதங்கத் துறையினர் வழங்கும் "அலங்காரா அழகா" "மல்லாரி" நிகழ்வும் "இன்றைய சமூக வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொள்வோர்" ஆண்களா! பெண்களா! என்னும் தலைப்பில் இ.சர்வேஸ்வரா நடுவராக பங்கு கொள்ளும் சிறப்பு பட்டிமண்டபத்தில் திரு. ந.ஐங்கரன், திருமதி. லதா கந்தையா, திரு. ஜீவா சஜீவன், திரு தெ. ஹர்சன், திருமதி. செல்வதியம்மா சுரேஸ், திரு. க. விஜயராஜ் ஆகியோர் வாதம் செய்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் அனைத்து கலாரசிகப் பெருமக்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



கிழவன்காடு கலாமன்றம்

பதிவாளர் காரைநகர்

பதிவாளர் யாழ் கிளை





# அவுஸ்திரேலிய மண்ணில் ஆடிய ஆட்டம் சிம்மாசனம் ஏறிய ரோஹித் சர்மா

ரோஹித் சர்மா முதல்முறையாக ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டதையடுத்து இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா, தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் முறையாக ஆடவர் ஒருநாள் துடுப்பாட்ட தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவுஸ்திரேலிய அணிக்கெதிராக அடிலெய்டில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் 73 ஓட்டங்களையும், சிட்னியில் இடம்பெற்ற போட்டியில் ஆட்டமிழக்காமல் 121 ஓட்டங்களையும் குவித்தார்.

இதன்படி இந்த தொடரின் நாயகனாகத் திகழ்ந்த ரோஹித் சர்மா, சுப்மன் கில் மற்றும் ஆப்கானிஸ்தான் அணியின் இப்ராஹிம் சட்ரான் ஆகியோரை பின்தள்ளி 781 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இது இரண்டாம் இடத்திலுள்ள இப்ராஹிம் சட்ரானை விட 17 புள்ளிகள் அதிகமாகும்.

அத்துடன் 745 புள்ளிகளுடன் சுப்மன் கில் மூன்றாம் இடத்தில் உள்ளார். மேலும் குறித்த தர வரிசையில் இலங்கை அணியின் தலைவர் சரித் அசலங்க 7ஆவது இடத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



## உருத்திர...

உயிரிழந்த இருவரில் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த டிலக்சன் என்ற சமுர்த்தி உத்தியோகத்தரும் உள்ளடங்குவதாக பெலாரஸ் இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

சட்டவிரோதமாக ஆட்கடத்தல் காரர்கள் மூலம் பெலாரஸ் சென்ற குறித்த இரு இலங்கையர்களும் பெலாரஸ் நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள அடர் காட்டுப் பகுதியூடாக ஐரோப்பாவுக்குள் உள்நுழைய முற்பட்டவேளை பெலாரஸ் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ந-7,316)

## பாதாள உல...

எத்தணிக்கின்றனர் எனப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து ஊடகங்களிடம் மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் என்பவற்றுடன் தொடர்புடைய நபர்கள் அரசியலுக்கு வந்துள்ளனர். எதிர் காலத்தில் அவர்கள் தேசிய அரசியலுக்குள் வருவதற்கும் திட்டமிட்டுள்ளனர். இப்படியானவர்களுக்கு இடமளிப்பது தொடர்பில் கட்சிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

எனவே குற்றவாளிகளுக்கு அரசியல் பாதுகாப்பை வழங்காதிருப்பதற்குக் கட்சிகளுக்கும் பெரும் பொறுப்புள்ளது.

போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் பாதாளக் குழுவினர் கட்சி அரசியலுக்கு வந்த பின்னர், வெள்ளை ஆடைகளை அணிந்துகொண்டு கறுப்பு வேலைகளைச் செய்கின்றனர். எனினும் எவற்றையும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றார். (ந-7)

## கடற்படை...

கைப்பற்றியதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முழு நாடுமே ஒன்றாக தேசிய செயற்பாடு மற்றும் போதையில்லா நாடு ஆரோக்கியமான பிரஜைகள் வாழ்க்கை என்ற தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, எதிர்கால சந்ததியினரைப் போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து விடுவிக்கும் தேசிய பணிக்கு பங்களிக்கும் வகையில் வடக்கு கடற்படை யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு அருகிலுள்ள உள்ளூர் கடற்பகுதியில் சிறப்பு தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

இதன்போது சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு ஒன்று பயணிப்பது அவதானிக்கப்பட்ட நிலையில், குறித்தபடகு கடற்படையால் வழிமறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன் போது அந்தப் படகில் ஆறு பைகளில் 85 பொதிகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 185 கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதையடுத்து கேரளக் கஞ்சாவை ஏற்றிச் சென்ற இரண்டு சந்தேக நபர்களையும் அந்த டிங்கிப் படகையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் மற்றும் கேரளக் கஞ்சாப் பொதிகள், டிங்கிப் படகு ஆகியவற்றை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் 25 மற்றும் 30 வயதுடையவர்கள் எனவும் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் மொத்த மதிப்பு நாற்பத்தொரு (41) மில்லியன் ரூபாய்க்கு மேல் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுண்பாகநிதி நிறுவனங்களின் அத்துமீறல் கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை

## தவிசாளர் நிரோஷ் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நுண்பாக நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகளையும் அடாத்தான வட்டிக்கு நிதி வழங்குபவர்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒக்ரோபர் மாத அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் அவசர நடவடிக்கைக்கான பிரேரணையாக சபையின் உறுப்பினர் ஐங்கரன் இராமநாதனால் மேற்படி பிரேரணை முன்வைக்கப்பட்டது.

கடந்த சபையில் நுண்பாக நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட கிராமங்கள் தோறும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் மூலம் நிதி நிறுவனங்கள் சட்டம் ஒழுங்கு அந் நிறுவனங்கள் வரையறைக்குப் புறம்பாக செயற்படுவது நீண்ட முயற்சியினால் மட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.


தற்போதைய நிலையில் மீளவும் கிராமங்கள் தோறும் நுண்நிதிக்கடன் வழங்குநர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்கு வைத்து வீடு வீடாகச் சென்று நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறாக ஈடுபடுவதன் வாயிலாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாட்டின் நடைமுறையில் உள்ள நிதி சார் சட்டம் ஒழுங்குகளின் வாயிலான கடப்பாடுகளை பூர்த்தி செய்யாது அவற்றினை அந் நிறுவனங்கள் மீறிவிடுகின்றனர். இதனால் பெரும் இன்னல்களுக்குள் கிராமப்புறப் பெண்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர். பிரதேச சபை நடைமுறையில் செயற்படும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை கிராமங்களுக்குள் கண்காணிக்க வேண்டும். அவற்றின் அத்துமீறல்கள் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என சபை உறுப்பினரின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும் மீற்றர் வட்டியாளர்களை சட்டத்தின் முன்நிறுத்தவும் வேண்டும். இந் நடவடிக்கைகளை தன்னால் கடந்த சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இவ்விடயத்தில் உடனடி இடர்நிலையாகக் கருதி பிரதேச சபை உச்ச அளவில் செயற்படாவிடில் அப்பாவிகளை பாதுகாக்க முடியாதுபோகும் என்பதுடன் அநியாயமாக பலர் தவறான முடிவுகளைக்கூட எடுக்கத் தள்ளப்படும் நிலை ஏற்படும். உடனடியாக இத் தீர்மானத்தினை முன்கொண்டு செல்லத்தக்க செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த உறுப்பினர் ஐங்கரன் இராமநாதனால் கோரப்பட்டது.

இத் தீர்மானத்தின் மீது உப தவிசாளர் ஜனார்த்தனன் தெரிவிக்கையில் மக்கள் தெளிவின்றி ஆடம்பரத் தேவைகளுக்காக முறைகேடான கடன்களைப் பெற்று பாரிய இடருக்குள் அகப்பட்டுள்ள நிலையில் அதுதொடர்பில் உடனடி நடவடிக்கைகளுக்காக சகல தரப்புக்களும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

இந் நிலையில் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட நிலையில் விரைவான செயற்றிட்டங்களை வகுத்து செயற்படுத்துவதற்கான ஒழுங்குகளை கடந்த காலத்தில் இச் சபையில் மேற்கொள்ளப்பட்டமை போன்று தற்போதைய சபையில் முன்வைக்கப்பட்டுள்ள மேலதிகத் தீர்மானத்தினையும் அடிப்படையாகக் கொண்டு விரைவான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தவிசாளர் தி.நிரோஷ் அறிவித்தார். (8)

# வடக்கு மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான, 'நகுலேஸ்வரி வாசுதேவன் இலவச கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி விநியோகத் திட்டம்' வடக்கு மாகாண சுகாதார மற்றும் கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து யாழ். போதனா மருத்துவமனையின் கண் மருத்துவ நிபுணர் எம். மலரவன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்துக்கான நிதி அனுசரணையை அலாகா அறக்கட்டளை (மலேசியா) மூலம், அசிஸ்ட் ஆர்ஆர் (இங்கிலாந்து மற்றும் இலங்கை) ஊடாக வழங்கப்பட்டது.

வடக்கிலுள்ள 9 ஆயிரத்து 313 மாணவர்கள் சுமார் 4.49 சதவீதத்தினர் கண்ணாடி தேவையுடையவர்களாக அடையாளப்படுத்தப்பட்டு அவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த ஒட்டுமொத்த செயன்முறை மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய 'தெளிந்த பார்வை, ஒளிமயமான எதிர்காலம்' என்ற நூல் ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை ஆளுநரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கண்பார்வை குறைபாட்டுடன் இருந்த எமது மாகாணப் பிள்ளைகளுக்கு இன்று புதிய உலகத்தை காணும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அவர்களது கல்வி மேம்பாட்டுக்கு வழி கிடைத்திருக்கின்றது. பல பிள்ளைகள் குறைபாடுகள் இருந்தாலும் மருத்துவமனைக்குச் செல்வதில்லை. பலருக்கு தங்கள் பிள்ளைகளுக்கு கண்ணில் குறைபாடு உள்ளது என்பதே தெரியாது. இவை எல்லாவற்றையும் மாற்றியமைக்கும் வகையில், பிள்ளைகளை தேடிச் சென்று நடத்திய இந்தச் செயற்றிட்டம் முறியடித்திருக்கின்றது. (8)

# சர்ச்சைகளில் சிக்கிய பிரதி பொலிஸ்மா அதிபர்

## அதிரடியாக பதவி நீக்கம்

(கொழும்பு)

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்கவை இலங்கை பொலிஸ் துறையின் நிர்வாகப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் எழுத்துப்பூர்வ கோரிக்கைக்கமைய இவ்வாறு அவர் குறித்த பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி, உத்தியோகபூர்வமாக பதவி நீக்கியதன் பின்னர் மத்திய மாகாணத்திற்கு மாத்திரமே சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க பொறுப்பேற்கவுள்ளார்.

இந்நிலையில், இலங்கை பொலிஸ் துறையின் நிர்வாகப் பதவிக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ்துறை மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பொலிஸ் தலைமையகத்தில் உயர் பதவி வகிக்கும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்கவை இடமாற்றம் செய்து அவர் மீது ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய முறைப்பாடொன்றை வழங்கியிருந்தார்.

லலித் பத்திநாயக்க பிற மூத்த அதிகாரிகள் பற்றிய தவறான தகவல்கள் சமூக ஊடகங்களுக்கு வழங்கியதாகவும், மிகவும் இரகசியமான உள்ளக பொலிஸ் துறை கோப்புகளை வெளி தரப்பினருக்கு வழங்கியுள்ளதாகவும் குறித்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விசாரணைகள் மேலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)


# மரண அறிவித்தல்

மண்ணில் 18 - 07 - 1943



விண்ணில் 29 - 10 - 2025

## திரு. கைலாசபிள்ளை பேரின்பநாயகம்

(ஓய்வுநிலை அதிபர், பத்திரிகையாளர்)

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் இல.04 கெனடி வீதி, இராமலிங்கம் றோட், திருநெல்வேலியினைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திரு.கைலாசபிள்ளை பேரின்பநாயகம் (ஓய்வுநிலை அதிபர், பத்திரிகையாளர்) 29.10.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை திருமேனி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் இலட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோசா(ராணி) இன் அன்புக் கணவரும், கம்சத்வனி(ஜேர்மனி), கஸ்ரோ(பிரதேசசெயலகம் - கோப்பாய்), நேதாஜினி(கனடா), நிவேதிகா(பிரதி அஞ்சல்மா அதிபர் - வட மாகாணம்) அவர்களின் பாசமிகு தந்தையாரும், சுகந்தன் (ஜேர்மனி), சுஜிரா (ஆசிரியர் - கண்டுக்குளி மகளிர் கல்லூரி), சஞ்சீவன் (கனடா), கேதீசன் (கட்டடங்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சந்தோஷ், மானசி, ஆதிரா, யாதவி, கேசவி, பூரணி, பிரணவி, நிகேதன், மித்ரா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ் சென்றவர்களான பூமணி, இராசமணி,இராஜேஸ்வரி, ரூபவதி, இரத்தினம், சிவலிங்கப்பிள்ளை ஆகியோரின் இளைய சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.11.2025 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இல 04, கெனடி வீதி,
இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (c-4228)

தகவல் குடும்பத்தினர்:
கஸ்ரோ - 077 129 3437
நிவேதிகா - 077 229 2462


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல; தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்



## பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச் செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல அது தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும் ஒரு தேசியச்செயற்பாடு என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

வருடத்தில் எத்தனையோ நாட்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப் பொங்கலே தமிழர்களின் தேசியப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது.

அதேபோன்று, வருடத்தில் எல்லா நாட்களிலும் மரங்களை நடுகை செய்ய இயலுமெனினும் கார்த்திகை மாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும்.

கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச் செய்யும் சூழலியற் செயல் மாத்திரமல்ல அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச் செய்யும் ஒரு தேசியச்செயற் பாடும் ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பூமி விரைந்து சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அதிவேகத்துடன் நீண்ட நேரம் நின்று தாக்கும் சூறாவளிகள், காலம் தப்பிக் கொட்டித் தீர்க்கும் அடைமழை, காடுகளில் தீ மூட்டும் கடும் வறட்சி, உயர்ந்து செல்லும் கடல் மட்டம், உயிரினங்களின் பேரழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். இதனால், வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமிலவாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப் பொருத்தமான மாதமாகும். ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பினைக் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவிற்கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத்தமது ஆதிவழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து, அவற்றை உயிருள்ள நினைவுச்சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர்.

தேசியம் என்பது வெறுமனே தட்டையான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மத நம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வகையில், கார்த்திகைமாத மரநடுகை என்பது தமிழ்த் தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும். எனவே தமிழ் மக்கள் கார்த்திகை மரநடுகையை ஒரு சூழல்பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன்கூடிய ஒரு தமிழ்த்தேசியச் செயற்பாடாகவும் கொண்டாட வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார். (8)

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் குறுகியகால கணனி பயிற்சிநெறி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த சாதாரண தரத் தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் மென்பொருள் பொறியியலில் இளமாணிப்பட்டக் கற்கைநெறி இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும்.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்விப்பொதுத் தராதரப் (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 04.01.2026 அன்று நடாத்தப்படும் தேர்வுப் பரீட் சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.

அத்துடன் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 30.11.2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு 021 222 3374 தொலைபேசியூடாகவும் கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்-பிராந்திய நிலையத்திலும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் குறுகியகால ஆங்கில கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# கிளி. மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் தமிழ் பெயர்களை கொண்ட நூல் வெளியீடு



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்திய கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இரணைமடுவில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இம்மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் தமிழமுதம் உருவாக்கிய 46 ஆயிரம் தமிழ்பெயர்களை கொண்ட நூல் வெளியீடு செய்யப்பட்டது.

தமிழ் பெயர்களை சூட்டி தமிழராய் வாழ்வோம் எனும் பொருள்பட இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் கலைஞர்கள், மாணவர்கள், பொது மக்கள், ஊடகவியலாளர்கள் என பல்வேறுபட்ட தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாளக்குழு; 82 பேருக்கு சிவப்பு பிடியாணை!



**(கொழும்பு)**

**எமது நாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு விட்டு வெளிநாடுகளில் பதுங்கி வாழ்வதற்கு இடமளிக்கமாட்டோம். அவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர்களை நாட்டுக்கு கொண்டு வந்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

216 பேருக்கு எதிராக சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்லர். சுமார் 82 பேரே பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர்கள்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களில் 17 பேர் இது வரையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களில் அதிகளவானோர் டுபாயிலேயே இருக்கின்றனர். சிலர் வெளிநாட்டு சிறைகளில் உள்ளனர். இவர்களைக் கொண்டு வருவதற்குரிய இராஜதந்திர நடவடிக்கையும் இடம்பெற்று வருகிறது எனத் தெரிவித்தார். (நி)

## அதிகரித்துவரும் நீரிழிவு நோயாளர்கள் மருத்துவர் சங்கம் அவசர எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து இலங்கை மருத்துவ சங்கம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது சுமார் 20 இலட்சம் இலங்கையர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆண்டு தோறும் சுமார் 40,000 பேருக்கு புதிய புண்கள் ஏற்படுவதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் சத்திர சிகிச்சைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ரெஸ்னி காசிம், இந்த நீரிழிவு புண்கள் பலரால் உணரப்படுவதைவிட மிகவும் ஆபத்தானவை என்றும், சில சமயங்களில் புற்றுநோயை விடவும் கடுமையானவை என்றும் எச்சரித்தார்.

தற்போது சுமார் 100,000 நீரிழிவு நோயாளிகள் இலங்கையில் புண்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் பலருக்குக் கால் அகற்றல் தேவைப்படலாம்.

உயர் சர்க்கரை அளவு காரணமாக ஏற்படும் நரம்பு பாதிப்பு, இரத்த ஓட்டம் குறைவது மற்றும் கல்சியம் படிதல் ஆகியவையே சிறிய புண்கள் கூட சிக்கலாவதற்கான முக்கிய காரணங்கள் எனக் குறிப்பிட்ட அவர், கால் அகற்றப்பட்டால், அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் மூன்றில் இரண்டு பங்கினர் இறக்க நேரிடும் என்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

நுரையீரல் புற்றுநோய் மற்றும் கருப்பை புற்றுநோய் ஆகியவற்றைத் தவிர, மற்ற அனைத்துப் புற்றுநோய்களைக் காட்டிலும் நீரிழிவு காரணமாகக் கால்" இழந்தவர்களின் விகிதமே மிக மோசமாக உள்ளது என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனவே, ஊனம் மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் சிக்கல்களைத் தவிர்க்க, நீரிழிவு நோயாளிகள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிப்பதும், ஆரம்பகால நோயறிதலும், சரியான பாதப் பராமரிப்பும் மிக அவசியம் என்று இலங்கை மருத்துவ சங்கம் வலியுறுத்தியுள்ளது. (நி)

## இலவச பொலித்தீன் பைகளுக்கு இன்று முதல் தடை விதிப்பு

(கொழும்பு)

பொருட்களை எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் பைகளை இலவசமாக விநியோகிப்பது இன்று முதல் தடைசெய்யப்படும் என்று நுகர்வோர் விவகார ஆணையம் அறிவித்துள்ளது.

ஒக்டோபர் 1 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில், நுகர்வோருக்கு வழங்கப்படும் பில்கள் விற்பனையாளர்கள் ஷொப்பிங் பைகள் விலையைக் குறிப்பிடுவதை நுகர்வோர் விவகார ஆணையம் கட்டாயமாக்கியது.

அந்த வர்த்தமானியில், அடர்த்தி குறைந்த பொலித்தீன், அடர்த்தி குறைந்த நேர்த்தியான பொலித்தீன் ஆகியவற்றில் உற்பத்தி பொருட்களை இலவசமாக வழங்க முடியாதெனவும், குறித்த பொலித்தீன் பைக்கான விலை வியாபார நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நுகர்வோருக்கு பொலித்தீன் பைகளை வழங்குவதை இடை நிறுத்தி இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முதல் முறையாக விவசாய ஒத்துழைப்பில் இணையும் இந்தியா - இலங்கை

(டில்லி)

இந்தியாவும் இலங்கையும் முதல் தடவையாக விவசாயம் தொடர்பில் கூட்டுப்பணிக்குழு சந்திப்பை நடத்தியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தக்கூட்டம் நேற்று முன்தினம் புதுடில்லியில் இடம் பெற்றுள்ளது.

இலங்கை விவசாய அமைச்சின் செயலாளர் டி பி விக்ரமசிங்க மற்றும் இந்திய விவசாயத்துறை தேவேஸ் சதுர்வேதி ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பண்ணை இயந்திரமயமாக்கல், இயற்கை விவசாயம், விதைத்துறை மேம்பாடு மற்றும் விவசாய தொழில் முனைவோர் உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பு குறித்து இதன்போது இரண்டு தரப்பினரும் விவாதித்துள்ளனர்.

டிஜிற்றல் விவசாயம், பயிர் காப்பீடு மற்றும் விவசாய தொடக்க நிறுவனங்கள் போன்ற முயற்சிகள் குறித்தும் இரண்டு தரப்பும் கலந்துரையாடியதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

## மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகாரிக்கு பிணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சியை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட நெவில் வன்னியாராச்சி, கொழும்பு நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நெவில் வன்னியாராச்சியை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்க பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் இந்த வழக்கு ஜனவரி 16 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நெவில் வன்னியாராச்சி சட்டவிரோத சொத்து சேர்ப்பு தொடர்பான விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் ஒக்டோபர் 2 ஆம் திகதி முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ரயிலுடன் மோதிய ஆட்டோ ஒருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

கஹவ மற்றும் அக்குரல ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் பாதையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டி ஒன்று பெலியத்தையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறைச்சிகளை ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இளவரசர் ஆண்ட்ரூவின்
# உரிமைகளை பறித்த மன்னர்



(லண்டன்)

ஐக்கிய இராஜ்ஜியத்தின் மன்னர் மூன்றாம் சார்லஸ், தனது சகோதரர் ஆண்ட்ரூவின் இளவரசர் பட்டத்தைப் பறித்து, அவரை விண்ட்சர் மாளிகையான ரோயல் லோட்ஜை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளார்.

பக்கிங்ஹாம் அரண்மனை இந்த நடவடிக்கையை உறுதிப்படுத்தியது.

மறைந்த பாலியல் குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீனுடனான ஆண்ட்ரூவின் உறவுகள் குறித்து நடவடிக்கை எடுக்க பல வாரங்களாக எழுந்த அழுத்தங்களின் பின்னணியில் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

ஜெஃப்ரி எப்ஸ்டீன் வழக்கு தொடர்பான குற்றச்சாட்டுகளில் சிக்கி அவமானப்படுத்தப்பட்ட இளவரசரைச் சுற்றியுள்ள ஊழலில் இருந்து அரச குடும்பத்தை விலக்குவதற்கான ஒரு முக்கியமான நடவடிக்கையாக இதனை பலர் கருதுகின்றனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகுதியில் பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆண்ட்ரூ தனது ரோயல் லோட்ஜ் என்ற மாளிகையை விட்டுக் கொடுக்க முறையான அறிவிப்பு தற்போது அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர் மாற்று தனியார் தங்குமிடத்திற்குச் செல்வார் என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஆண்ட்ரூ இளவரசராக அல்லாமல் ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன் விண்ட்சர் என்று அழைக்கப்படுவார் என்று அரண்மனை தெரிவித்துள்ளது. (நி)

# சிலர் நெருப்போடு வி
# பாகிஸ்தானை எச்சரி

(காபூல்)

"சிலர் தெரிந்தோ, தெரியாமலோ, நெருப்புடன் விளையாடுகிறார்கள்" என்று பாகிஸ்தானுக்கு ஆப்கான் தலிபான் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, ஆப்கானுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே தொடர்ந்து மோதல் இருந்து வருகிறது.

சில தினங்களுக்கு முன்பு கூட எல்லையில் இருதரப்பினரும் மாறி மாறி தாக்குதல் நடத்தி வந்தன.

கடந்த 9ஆம் திகதி காபூலில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தான் காரணம் என்று தலிபான்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதையடுத்து, இருநாடு



# மூன்று மாதங்களில் 50 கிலோ எடை
# குறைத்தால் சொகுசு சிற்றூர்ந்து பரிசாம்
## சர்ச்சையை ஏற்படுத்திய அறிவிப்பு

(பீஜிங்)

சீனாவில் உள்ள உடற்பயிற்சிக் கூடம் ஒன்றில் மூன்று மாதங்களுக்குள் 50 கிலோ எடையைக் குறைக்கும் நபருக்கு சொகுசு சிற்றூர்ந்து ஒன்று பரிசளிக்கப்படும் என்ற சவாலை அறிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஷான்டாங் மாகாணத்தின் பின்ஜோவில் உள்ள இந்த உடற்பயிற்சிக் கூடம், வெற்றியாளருக்கு ஒரு போர்ஷே பனமேரா சிற்றூர்ந்தை பரிசாக வழங்குவதாகக் கூறியுள்ளது.

இந்த விளம்பரம் இணையத்தில் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், குறுகிய காலத்தில் இவ்வளவு தீவிர எடை குறைப்பு என்பது ஆபத்து என சுகாதார நிபுணர்கள் கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.



ஒரு நாளைக்கு 0.5 கிலோ எடை இழப்பு என்பது மிக வேகமாக உள்ளது என்றும், இது கொழுப்பை விட தசை இழப்புக்கு வழிவகுக்கும் என்றும் குடலிறக்க அறுவை சிகிச்சை நிபுணர்கள் தெரிவித்தனர்.

வாரத்திற்கு சுமார் 0.5 கிலோ எடையைக் குறைப்பதே பாதுகாப்பான இலக்கு எனவும் அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

அதோடு தசை இழப்பால் பெண்களுக்கு ஹார்மோன் ஏற்றத் தாழ்வுகள், முடி உதிர்தல் மற்றும் ஒழுங்கற்ற மாதவிடாய் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 30 பேரை இலக்காகக் கொண்டு இந்த சவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடுகிறார்கள்! ...ரிக்கும் தலிபான்கள்!



...களிடையேயான சண்டையை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தை துருக்கி, கட்டார் தலைமையில் நடைபெற்றது.

ஆனால், இந்தப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது.

தொடர்ந்து, இஸ்தான்புல்லில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் இடையே நவம்பர், 6ஆம் திகதி மீண்டும் பேச்சு நடத்தப்பட இருப்பதாகத் துருக்கி அறிவித்துள்ளது.

அதுவரையில் போர் நிறுத்தம் செய்ய இருதரப்பும் ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தானுக்கு தலிபான் உள்துறை அமைச்சர் சிராஜுதின் ஹக்கானி எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் கூறியதாவது நாம் அனைவரும் முஸ்லிம்கள், சகோதரர்கள்.

ஆனால், சிலர் (பாகிஸ்தான்) தெரிந்தோ, தெரியாமலோ, நெருப்புடனும், போருடனும் விளையாடுகிறார்கள்.

நாங்கள் போரை விரும்பவில்லை.

அதேவேளையில் எங்கள் பிராந்தியத்தை காப்பாற்றுவதற்கு முன்னுரிமை கொடுப்போம் எனக் கூறினார்.

இதற்கிடையே, ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் பாயும் காபூல் நதியில் உடனடியாக அணை கட்டும் திட்டத்தை தொடங்க ஆப்கான் தலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

# சீனப் பொருட்கள் மீதான வரியை குறைத்தார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சீனப் பொருட்கள் மீதான வரியை 10 சதவீதம் குறைத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

இதன் மூலம் முன்னர் 57 சதவீதமாக இருந்த வரி தற்போது 47 சதவீதமாகக் குறைந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து, பிற நாடுகளுக்கு எதிராக வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். இதன் ஒரு பகுதியாக, சீனப் பொருட்களுக்கு எதிராக அவர் கூடுதல் வரி விதித்ததால், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் பெரும் வர்த்தகச் சலசலப்பு நீடித்து வந்தது.

இந்தச் சூழ்நிலையில், தென்கொரியாவின் புசான் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோருக்கு இடையே முக்கியமான பேச்சு வார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில், பரஸ்பர வரி விதிப்புகள், அரியவகை கனிமங்கள் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் போன்ற முக்கிய வர்த்தகப் பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்னரே, சீனப் பொருட்கள் மீதான வரியை ட்ரம்ப் குறைத்துள்ளார். (நி)

ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை ஏழு முதல் எட்டு பேர் இதற்காகப் பதிவு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதேவேளை இந்த அதிவேக எடை குறைப்பு சவாலின் பயிற்சி முறை மற்றும் உணவுத் திட்டம் பற்றிய விபரங்களை உடற்பயிற்சிக்கூடம் வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)



# 67 இன்றைய தலைமுறையின் சிறந்த வார்த்தையாம்

Dictionary.com 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த வார்த்தையாக 67 ஐத் தேர்ந்தெடுத்துள்ளது.

67 என்ற எண்ணை வார்த்தையாக தேர்ந்தெடுத்திருப்பது பலரையும் சிந்திக்க வைத்துள்ளது.

இதற்கு காரணம் 67 என்பது ஒரு எண்ணாக அல்லாமல் குறியீடாக இருப்பதே ஆகும்.

அண்மைக் காலங்களாக சமூக வலைத்தளங்களில் ஜென் ஆல்பா சிறுவர், சிறுமிகள் 67 என்ற எண்ணை அதிகம் பதிவிடுகின்றனர்.

2010 - 2024 இடையில் பிறந்தவர்கள் ஜென் ஆல்பா ஆவர்.

அவர்களுக்கு 67 என்பது உற்சாகத்தை வெளிப்படுத்தும் ஒரு குறியீட்டு வழியாக மாறியுள்ளது.

டிக்டொக்கில் 67 என்ற ஹேஷ்டேக் 2 மில்லியன் பதிவுகளைத் தாண்டியுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்று தெரியாமல் பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

ட்ரெண்டின் படி, இதை "அறுபத்து ஏழு" என்று உச்சரிக்காமல், "சிக்ஸ்-செவன்" என்றுதான் சொல்ல வேண்டும். 67 எப்படி குறியீடாக மாறியது என்பது உறுதியாகத் தெரியவில்லை. இதற்கு ஒரு நிலையான வரையறை இல்லை, அதன் பயன்பாடு சூழலுக்குச் சூழல் மாறுபடும் என்று Dictionary.com தெரிவித்துள்ளது.


இதன் பயன்பாடு, அமெரிக்க ராப் பாடகர் ஸ்க்ரில்லாவின் 'Doot Doot (6 7)' என்ற பாடலிலிருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பாடசாலைகளில் சில மாணவர்கள் ஆறு என்று சொல்லும்போது, மற்றவர்கள் ஏழு என்று கத்துகின்றனர்.

ஆசிரியர்கள் 67 என்ற எண்ணையே மாணவர்கள் உச்சரிக்கத் தடை விதிக்கும் அளவுக்கு 67 என்பது இளைய தலைமுறையின் குறியீடாக மாறியுள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் குறைந்த அரிசி விற்பனை வியாபார நிலையத்திற்கு சீல்



(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை மொத்த அரிசி விற்பனை நிலையங்களில் சோதனைகளை மேற்கொண்ட பொழுது - உள்ளூர் உற்பத்தி அரிசி உரைகளில் தரம் குறைந்த மற்றும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்ட ரக அரிசிகளை பொதி செய்து விற்பனை செய்த வியாபார நிலையம் ஒன்றை சோதனை செய்த அதிகாரிகள் அந்த அரிசி பொதிகளுக்கு சீல் வைத்து வழக்குத் தொடுத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சட்ட விரோத நடவடிக்கையில் நுகர்வோர் பாரிய அளவில் பாதிப் படைந்ததுடன் வியாபாரிகள் கொள்ளை இலாபத்தை ஈட்டி வந்ததாகவும் தெரிய வந்துள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989- இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L,சாரதி
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15920

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: மூலம்
கி-பா:75
1 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்-BSc, PHD, Lecturer
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: B/15921

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:மூலம்
12 இல் செவ்
கி-பா: 22
உயரம்:5'7"
தகைமை/தொழில்:Engineer (Singapore)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15922

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: பூராடம்
2இல்செவ்
கி-பா-7 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்- Bsc, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15923

பிறப்பு: 1999- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
2இல்செவ்
உயரம்:6"
தகைமை/தொழில்: BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி.உத்தியோகம்
தொ.இ: B/15924

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா- 30 1/2
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc, ITwork
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15930

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்- ரோகினி
கி-பா: 36
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: சித்தமருத்துவர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15931

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்- மகம்
8 இல் செவ்
கி-பா-17 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BE, Engineer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15933

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்- விசாகம்
11 இல் சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HND Software Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15941

பிறப்பு-1986-இந்து
நட்சத்திரம்- பூரட்டாதி
2 இல் செவ்
கி-பா: 34 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர் பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/15942

இல. 144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 475



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கீதையும் நிர்வாகமும்

அரசாங்க உத்தியோகம் பார்க்கின்ற ஒருவர் பகவத் கீதையை படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். "சார்! நீங்கள் பார்க்கின்ற உத்தியோகத்திற்கும் படிக்கின்ற புத்தகத்திற்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இருக்கின்றதா தெரியவில்லையே" என்றேன்.

"என்ன அப்படி சொல்லிவிட்டீர்கள். இதிலே கர்மயோகத்தைப் பற்றிப் பேசும் போது மூன்று தத்துவங்கள் வலியுறுத்தப்படுகிறது. நிர்வாகிகள் எல்லாம் அதை கொஞ்சம் புரிந்துகொண்டால் நல்லது!" என்றார்.

அது என்ன மூன்று தத்துவங்கள்? என்றேன். அவர் சொல்ல ஆரம்பித்தார். எதிலும் பற்றற்று இருத்தல் இது ஒரு தத்துவம்.

பலனை எதிர்பார்த்துச் செய்யாமை - இது இரண்டாவது.

எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்வது இது மூன்றாவது!" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்கும் நிர்வாகத்துக்கும் என்ன சம்பந்தம்? என்றேன். "விபரமாகச் சொல்கிறேன் கேளுங்கள்" என்றார். அதன்பின் சொன்னார்.

முதல் கருத்து என்ன? எதிலும் பற்றற்று இருத்தல்.

ஒரு அலுவலக மேலாளர் யார் மேலேயும் பற்று கொள்ளாமல் எல்லாரையும் சரி சமமாக நடத்த வேண்டும்.

இவர் தமக்கு வேண்டியவர்! அவர் நமக்கு வேண்டாதவர்! என்கிற எண்ணம் எல்லாம் அவருக்கு வரக்கூடாது.

ஒரு அலுவலகம் என்று இருந்தால் அங்கே "கோள் சொல்வதற்கு" என்று சில பேர் இருப்பார்கள்!

"திறமையாக வேலை செய்கிறவர்களைப் பற்றிக்கூட இவர்கள் மோசமாக அதிகாரிகளிடம் சொல்லி வைத்துவிடுவார்கள்"!

மேலே இருக்கின்றவர் இதைக் கேட்டு நடக்க ஆரம்பித்தால். வேலைதான் வீணாகப் போகும்!

சரி! இப்ப அந்த இரண்டாவது தத்துவத்துக்கு வருவோம். அது என்ன சொல்லுது?

பலனை எதிர்பார்த்து எதையும் செய்யாதே! என்றால் பலனே வேண்டாம் என்று அதை விளங்கிக் கொள்ளக் கூடாது!

இலாபம் வந்தாலும் சரி நட்டம் வந்தாலும் சரி மனது ஒரே சீராக இருக்க வேண்டும். நட்டம் வந்தால் அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும். அதை விட்டுவிட்டு மனது சோர்ந்து போய் உட்கார்ந்து விடக்கூடாது. அல்லது வேலை செய்கிறவர்களை வீட்டுக்கு அனுப்பலாமா என்று யோசிக்கக் கூடாது!அதே மாதிரி இலாபம் வந்தால் அதற்காக துள்ளிக் குதித்துக்கொண்டு இருக்கக்கூடாது. அப்படி இருக்கும் போது கவனக் குறைவு ஏற்பட வாய்ப்பு உண்டு. இது, அடுத்த வருட நட்டத்திற்கு காரணமாகக்கூட ஆகிவிடும். மூன்றாவது தத்துவம் என்ன சொல்லுது? எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தல்.

ஓர் அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற ஒருவரிடம் போய். "நீங்கள் யாருக்காக வேலை செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"என்ன சார் இப்படி கேட்கிறீர்கள். நான் எனக்காகத் தான் வேலை செய்கிறேன்." என்றார். அப்படியா சொல்கிறீர்கள்? என்றேன்.

ஆமாம்! முதலாம் திகதி சம்பளம் வாங்கவே. அதற்காகத் தான் வேலை செய்கிறேன்!" என்றார்.

சம்பளத்திற்காக வேலை செய்கிறோம் என்று நினைக்காமல் இந்த நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக வேலை செய்கிறோம் என்ற நினைப்பு வர வேண்டும், அதன் மூலமாக இந்த நாட்டை வளப்படுத்துகிறோம் என்ற நினைப்பு வேண்டும்"ஈஸ்வர அர்ப்பணம் என்றால் அதுதான். செய்யும் தொழிலே தெய்வம்! இவ்வளவையும் அந்த நண்பர் என்னிடம் விபரமா சொல்லிவிட்டு, இப்போது சொல்லுங்கள் சார்,

கீதையின் கர்ம யோகத்துக்கும் காரியாலய நிர்வாகத்துக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா?" என்றார். நீங்கள் சொல்வது? சரிதான் என்று சொல்லிவிட்டு எழுந்தேன்.

வெளியிலே வந்தேன். நினைத்துப் பார்த்தேன். இன்றைய அலுவலகங்கள் எல்லாம் இப்படியா இருக்கிறது?ஒருவர் கேட்டார்:"என்ன இது உங்கள் அலுவலகம் வரவுக்கொப்பியிலே பென்சிலை கட்டிப் போட்டிருக்கிறீர்கள் இதையெல்லாம் கூடவா திருடிக்கொண்டு போய் விடுவார்கள் என்றார்."இது 36ஆவது பென்சில்!" என்றார் அவர்."எங்க அலுவலகத்திலும் கூட பென்சில் திருட்டுப் போவது உண்டு. ஆனால் அதை இப்படி வரவுக்கொப்பியிலே கட்டிப் போடுவதில்லை!" என்றார் இவர். "ஏன்?" என்று கேட்டார்."அப்படி செய்தால் அதையும் சேர்த்துத் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள் சார்..!" என்றார். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழவன்காடு கலாமன்றத்தின் பரிசளிப்பும் கலைநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்கிளை-காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கிழவன்காடு கலாமன்ற ஸ்தாபகரும் தலைவருமான ந.சோதிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா மற்றும் யாழ்.பல்கலைக்கழக மொழியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிவராணி சிறிசற்குணராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண நில அளவையாளர் நாயகம் காரை.பொ.சிவானந்தன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் ஆறு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் துறைசார் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை வருகை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வி மைதிலி அருளையா ஆகியோரும் கௌரவ விருந்தினராக கிழவன்காடு கலாமன்ற உறுப்பினர் திருமதி. சிவஞானம் உமாதேவி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்ட்டு பிரச்சினை தீர, எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் வழங்கவுள்ளார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# சட்டவிரோத மதுபானசாலையை உடனடியாக மூடுங்கள்

## சபையில் வலியுறுத்து

(சாவகச்சேரி)

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் அனுமதி இன்றி இயங்கி வருகின்ற மதுபானசாலையை சீல் வைத்து மூடுமாறு சாவகச்சேரிப் பிரதேசசபையின் மாதாந்த கூட்டத்தில் உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சபை உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கொடிகாமம் பகுதியில் உணவகத்திற்கு அனுமதியைப் பெற்று விட்டு இரவில் மதுபான விற்பனை இடம்பெறுகின்றது.

எனவே அனுமதி இல்லாத மேற்படி மதுபானசாலையை உடனடியாக மூடி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண்டும்.

அத்துடன் சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக்குள் பல விடுதிகள் பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன. அவை தொடர்பிலும் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பதிவு செய்யப்படாத விடுதிகளில் போதைவஸ்து பாவனை மற்றும் விபச்சாரம் உள்ளிட்ட கலாசார சீரகேடுகள் இடம்பெற்று வருவதாகவும் மேலும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 | 350 | 300 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 200 | 220 | 190 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 250 | 200 | 160 |
| தக்காளி | 180 | 250 | 200 | 200 | 150 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 120 | 200 | 80 |
| கோவா | 180 | 180 | 200 | 200 | -- | 120 |
| கரட் | 160 | 250 | 250 | 250 | 170 | 150 |
| பூசணி | 60 | 60 | 100 | 80 | -- | 25 |
| புடோல் | 150 | 250 | 200 | 250 | -- | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 200-300 | 300 | 320 | -- | 220 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 200 | 160 | 140 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 600 | 500 | 400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 150 | 100 |
| கருணைக் கிழங்கு | 250 | 200 | 250 | 300 | -- | 250 |
| பயற்றங்காய் | 200 | 300 | 150 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 180 | 250 | 250 | 250 | -- | 140 |
| பீற்றூட் | 100 | 120 | 200 | 150 | 150 | 100 |
| கறிமிளகாய் | 500 | 500 | 500 | 600 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 150 | 400 | 250 | 400 | 250 | 175 |
| போஞ்சி | 500 | 550 | 600 | 600 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 150 | 200 | -- | -- |
| தேசிக்காய் | 1500 | 1600 | 1600 | 1400 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 800 | 950 | 600 | 800 | -- | 600 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 200 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 80 | -- | 35 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 100 | -- | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 | -- | -- |

# இராசிபலன்

01.11.2025
ஐப்பசி 15, சனிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 3.26 மணிவரை

சதயம் பிற்பகல் 2.47 மணிவரை
சுப நேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை

உத்தான ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்: ஆயிலியம், மகம்

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்பாராத பிரமுகர் ஒருவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.




மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.




எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கல்யானக் கனவுகள் நனவாகலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




கனவுப் பலிதமுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கூடும், சொந்த பந்தங்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் திருப்தியுண்டு.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.




புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.




கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குசெய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்ய முற்படுவீர்கள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள்.




உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் விவகாரங்கவில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.


அழிவே இல்லாத ஒரே சொத்து கல்வி மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் — பாகம் - 4 — 899





வழியில் வேண்டுமென்று கடலில் குதித்தான். இன்னொரு எரிந்த கப்பலில் இருந்த யாரோ ஒருவனைக் காப்பாற்றுவதற்காக என்று சொல்லி, பார்த்திபேந்திரன் தடுத்தும் கேளாமல், கொந்தளித்த கடலில் குதித்தான். இப்போது யோசிக்கும் போது எல்லாமே பொய்யென்றும் என்னை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்றும் தோன்றுகிறது.

இந்தச் சூழ்ச்சியில் குந்தவையும் சம்பந்தப்பட்டவள் என்பதை நினைக்கும்போது தான் எனக்கு வேதனை தாங்கவில்லை. இந்த உலகமே எனக்கு எதிராகப் போனாலும் குந்தவை என்னுடன் இருப்பாள் என்று எண்ணியிருந்தேன். ஒரு தகப்பன் தன் மகளிடம் சாதாரணமாகச் சொல்லத் தயங்கக் கூடிய வரலாறுகளையெல்லாம் சொன்னேன்."

"அரசர்க்கரசே! இளையபிராட்டி தங்களுக்கு எதிராக சதி செய்வதாய் உலகமே சொன்னாலும் நான் நம்ப மாட்டேன். தாங்களும் நம்பக்கூடாது. இளையபிராட்டி ஒரு விடயத்தைத் தங்களிடம் சொல்லவில்லை என்றால், அதற்குக் காரணம் அவசியம் இருக்கவேண்டும். சின்ன இளவரசர் தம் சிநேகிதனைக் காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்ததில் பொய் ஒன்றுமில்லை. இளவரசையும் அவருடைய சிநேகிதரையும் கடலிலிருந்து காப்பாற்றிக் கரை சேர்த்த ஓடக்காரப் பெண் இதோ அடுத்த அறையில் இருக்கிறாள். இலங்கையில் நடந்தவற்றையும் நேரில் பார்த்து அறிந்தவள். அரசே! அவளைக் கூப்பிடட்டுமா!" என்றார் அநிருத்தர்.

சக்கரவர்த்தி மிக்க ஆவலுடன், "அப்படியா? உடனே அவளை அழையுங்கள். முதன் மந்திரி! கோடிக்கரையிலிருந்து நீர் பலவந்தமாகப் பிடித்து வரச் சொன்ன பெண் அவள்தானா?" என்றார்.

"பழுவேட்டரையர் பல்லக்கில் வந்த பெண்தான் அடுத்த அறையில் காத்திருக்கிறாள். இதோ அழைக்கிறேன்" என்று அநிருத்தர் கூறிக் கையைத் தட்டியதும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் உள்ளே வந்தார்கள்.

### அத்தியாயம் 31
### முன்மாலைக் கனவு

பூங்குழலியைச் சக்கரவர்த்தி உற்றுப் பார்த்துவிட்டு, "இந்தப் பெண்ணை நான் இதுவரை பார்த்ததில்லையல்லவா? ஆனால் முகஜாடை சற்றுத் தெரிந்த மாதிரி இருக்கிறது. பிரம்மராயரே! இவள் யார்?" என்று கேட்டார்.

"இவள் கோடிக்கரைத் தியாக விடங்கர் மகள் பெயர் பூங்குழலி!"

"ஆகா! அதுதான் காரணம்!" என்று சக்கரவர்த்தி கூறினார். பிறகு வாய்க்குள்ளே, 'இவள் அத்தையின் முகஜாடை கொஞ்சம் இருக்கிறது! ஆனால் அவளைப் போல் இல்லை. ரொம்ப வித்தியாசம் இருக்கிறது' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

அவர் முணுமுணுத்தது பூங்குழலியின் காதில் இலேசாக விழுந்தது. அதுவரையில் சக்கரவர்த்தியைப் பூங்குழலி பார்த்ததில்லை. அவர் அழகில் மன்மதனை மிஞ்சியவர் என்று கேள்விப்பட்டிருந்தாள்.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

## வருமுன் காப்போம்



(நேற்றைய தொடர்ச்சி)

ராமு அவர்களிடம் மன்னிப்பு கேட்டு விட்டு தான் இன்று இரவே குளத்தை விட்டு போவதாக சொல்லி விட்டு இரவே தப்பி வேற குளத்திற்கு போய் விட்டது.

மறு நாள் காலையில் சோமு, தாமு இருவரும் கூடி பேசினார்கள், மீன் பிடிப்பதாக சொன்னவர்களை காணவில்லை, சும்மா பேச்சுக்கு சொன்னதை நம்பி ராமு வேற குளத்திற்கு போனது முட்டாள்தனம் என்று கேலி செய்தன.

சிறிது நேரத்தில் வலை விரிப்பதாக சொன்ன இருவரும் பெரிய வலையை எடுத்து வந்து எங்கே வலை வீசுவது என்று பேசினார்கள். அவ்வளவு தான் அதைக்கேட்டு சோமு "ஐயோ கடவுளே!, ராமு அப்போவே சொன்னதே இரவே தப்பியிருக்கலாமே என்று புலம்பியது.

ஆனால் தாமு அந்த சூழ்நிலையிலும் கொஞ்சமும் பயப்படவில்லை, "என் பயப்படுகிறாய், குளத்தில் எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன, நாம் மறைந்து கொள்ளலாம்" என்றது.

சோமு கொஞ்சம் கொழுகொழு மீன், அதற்கு பயம் வந்து விட்டது, அதற்குள் மீனவர்கள் வலை வீச, தாமு ஓடி ஒளிந்து கொண்டது. சோமு மாட்டிக் கொண்டது, வலையில் இருந்து தன்னை விடுவிக்க படாத பாடு பட்டது, இறுதியில் சோமுவின் வால் பகுதியும் முதுகும் சேதமடைந்து, வலையில் இருந்து விடுபட்டு நீரோடையில் பாய்ந்து தப்பி விட்டது. உடல் எங்கும் ரத்தம், வரும் முன்னால் காக்காமல் வந்த போது காக்க நினைத்த தன் முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.

தாமு குளத்தின் உள்ளே இருந்த பாறையின் அடியில் ஒளிந்துக் கொண்டது, தான் வீரமாக தப்பியதை நினைத்து பெருமைப்பட்டது. அது மிகவும் நேரம் நீடிக்கவில்லை. வந்த இருவரில் ஒருவர் நீண்ட கம்பை எடுத்து குளத்தின் அடியில் இருக்கும் பாறைகளில் செலுத்தி அசைத்தார், அவ்வாறு செய்கையில் ஒரு முறை அந்த கம்பானது தாமுவை தாக்கியது, தாமு தப்பிக்க நினைத்து அதிலிருந்து வெளியே வர, அங்கே இருந்த வலையில் மாட்டிக் கொண்டது. சிறிது நேரத்தில் மீனவர்கள் வலையை வெளியே எடுத்து மாட்டிய அனைத்து மீன்களையும் தரையில் போட்டு கொன்றார்கள். அதில் தாமுவும் ஒரு மீன்.

வரும் முன் காப்போம் என்ற கொள்கை கொண்ட ராமு ஒரு ஆபத்தும் இல்லாமல் தப்பி, மகிழ்ச்சியாக வாழ்ந்தது, வந்த போது காப்போம் என்ற கொள்கை உடைய சோமு, உடல் எங்கும் காயப்பட்டு, மற்ற மீன்களுக்கு பயந்து பயந்து வாழ்ந்தது.

வந்த பின்பு பார்ப்போம் என்ற கொள்கை உடைய தாமுவோ கொல்லப்பட்டு விட்டது.

குழந்தைகளே! இக் கதையானது நம் அனைவருக்கும் நல்ல பாடம். எந்த விசயத்தையும் வரும் முன்பே யோசிக்க வேண்டும், மழைக்காலம் என்றால் வெளியே செல்லும் போது கையில் குடை இருக்க வேண்டும். தேர்வு வருகிறது என்றால் ஒரு வாரத்திற்கு அனைத்துப் பாடங்களையும் படித்து முடிக்க வேண்டும். கடைசி நேரத்தில் படிக்கத் தொடங்கினால் அது பயன் அளிக்காது, எனவே நாம் எப்போவும் வரும்முன் காப்போம் என்ற கொள்கையை பின்பற்ற வேண்டும், பின்பற்றினால் கவலையின்றி வாழலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் ஒவ்வொருவரிடமும் நல்லவைகளைக் காண்பதே இனிமையான தன்மையாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யதார்த்தத்தை உரைத்த ஜனாதிபதி அநுர குமார

போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான தேசிய செயற்றிட்டம் நேற்று முன்தினம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மிக நீண்டதும் பெறுமதியானதுமான உரையை ஆற்றியிருந்தார்.

இலங்கைத் திருநாட்டுக்குள் போதைப்பொருள் எவ்வாறு நுழைந்தது என்பது தொடங்கி, போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள், அவர்களுக்கு உதவி செய்பவர்கள் என நீண்டதொரு பட்டியலை அவர் முன்வைத்தார்.

இங்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆற்றிய உரை பெறுமதி வாய்ந்தது என நாம் கூறுவதற்குக் காரணம்; அவருடைய உரையில் யதார்த்தங்கள் வெளிப்பட்டிருந்தமையாகும்.

ஆம், இந்த நாட்டுக்குள் போதைப்பொருள் உள்நுழைவதற்கு குறிப்பிட்ட அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் ஆசீர்வாதம் இருந்துள்ளது.

தவிர, குறித்த அரச திணைக்களங்கள் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு பேருதவி புரிந்துள்ளன.

இதையும் கடந்து, போதைப்பொருள் வர்த்தகம் இத்துணை தூரம் வியாபித்து எங்கள் இளம் சமூகத்தைக் கந்தறுப்பதற்கு மூலகாரணம் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு பொலிஸாரின் உதவியும் ஒத்துழைப்பும் இருப்பதாகும்.

எனவே பொலிஸை சுத்தம் செய்யாமல் போதைப்பொருள் வர்த்தகத்தை ஒருபோதும் ஒழிக்க முடியாது என்ற அனைத்து உண்மைகளையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எவருக்கும் அஞ்சாமல் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தனது உரையில் கூறிய அனைத்தும் மெய்ப்பொருளானவை. இருந்தும் பொலிஸை சுத்தம் செய்யாமல் போதைப்பொருளை ஒழிக்க முடியாது என்ற பேருண்மையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பகிரங்கமாகக் கூறியதற்காக அவருக்கு வசிட்டரின் வாயால் விருது வழங்க முடியும்.

ஆம், கடந்த கால ஆட்சியாளர்கள் இந்த நாட்டைக் கந்தறுத்தனர். ஏழை மக்கள் படும் அவலம் குறித்து அவர்கள் இம்மியும் கவலைப்படவில்லை.

மாறாக, இளம் சமூகம் போதைக்கு அடிமையாகுவதன் மூலம் தங்களின் கஜானாவை நிரப்பிக் கொள்வதே அவர்களின் இலக்காக இருந்தது.

தவிர, பொலிஸாரில் குறிப்பிடத்தக்கவர்கள் போதைப்பொருள் வர்த்தகர்களுடன் சேர்ந்து எங்கள் இளம் சமூகத்தின் இனிய வாழ்வை நாசமாக்கினர்.

நாட்டில் சட்டத்தை – நீதியை நிலைநாட்டி பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் பொதுமக்களுக்குத் துரோகம் இழைப்பதென்பது மன்னிக்க முடியாத குற்றம்.

எனினும் இதுகாறும் யாரும் கூறாத ஓர் உண்மையான உண்மையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியிருப்பது கண்டு மனம் மகிழ்கிறது – மனம் நெகிழ்கிறது. எங்கே போதையை ஒழிக்க முழு நாடும் ஒன்றாக அணிசேரட்டும்.

## மகிந்த குடும்பமே சர்வாதிகார ஆட்சியை நாட்டில் முன்னெடுத்தது

### மொட்டுக் கட்சிக்கு அரசாங்கம் பதிலடி

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, சர்வாதிகாரி ஹிட்லர் போல் செயற்படவில்லை. ராஜபக்ஷ குடும்பத்தினர் தான் ஹிட்லர் போல் செயற்பட்டனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஹிட்லர் போல் செயற்படுகின்றார் எனவும் ஹிட்லரைத் தோற்கடிப்பதற்காக அன்று ரஷ்யாவும் அமெரிக்காவும் ஒன்றிணைந்தது போல் எதிரணிகள் ஒன்றுபட வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே பொதுமக்கள் பாதுகாப்புப்பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தாரும் தான் ஹிட்லர் போல் செயற்பட்டனர்.

ஜனநாயகத்துக்குச் சமாதி கட்டி சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்கு 18 ஆவது திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது.

இதனைச் சாகர காரியவசம் மறந்து விட்டார் போலும். எமது ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுகின்றார்.

நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். இந்தக் கோட்பாட்டை நாம் மீறப்போவதில்லை எனப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## தனியார் பேருந்துப் பயணம் பற்றுச்சீட்டு கட்டாயம்

### பொதுமுகாமையாளர் ஜெயராஜா அறிவிப்பு

வடமாகாணத்தில தனியார் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் நடத்துநரிடம் பயணப் பற்றுச் சீட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும் என வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை பொது முகாமையாளர் ப.ஜெயராஜா அறிவித்துள்ளார்.

தனியார் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் பரிசோதனை நடவடிக்கையின் போது பற்றுச்சீட்டினை காண்பிக்கத் தவறுமிடத்து, பயணியொருவர் ரூபா 500 தண்டம் செலுத்துவதுடன் பயணக் கட்டணத்தின் இரண்டு மடங்கு கட்டணத்தையும் அவர் அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் பரிசோதனை நடவடிக்கை இடம்பெறும் எனவும் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ந-7)

## இரத்தினபுரியில் துப்பாக்கிச் சூடு

### இருவர் காயம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி, கலாவானப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இத்துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

எவ்வாறெனினும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## உருக்குலைந்த நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

அம்பாந்தோட்டையில்பெலியத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகுலுகமுவ, தெத்துவாவெல பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பொன்றிலிருந்து சிதைவடைந்த நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெலியத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் மோட்டார் சைக்கிள் நாகுலுகமுவ ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பெலியத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## இலஞ்சம் பெற்ற தவிசாளர் கைது

திருகோணமலை, குச்சவெளிப் பிரதேச தவிசாளர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிலாவெளி இக்பால் நகர்ப் பகுதியில் வைத்து பெண் ஒருவரிடமிருந்து ஐந்து இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றுக் கொண்டபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தவிசாளர் நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

நிலாவெளியிலுள்ள காணியில் ஹோட்டல் ஒன்று அமைப்பதற்காக காணி உரிமையாளர் காணிக்கான அனுமதிப் பத்திரம் பெற முயற்சித்த போது, அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருவதாகக் கூறி காணி உரிமையாளரான பெண்ணிடமிருந்து குச்சவெளிப் பிரதேச தவிசாளரான ஏ.முபாரக் இலஞ்சம் கோரியதாகவும் இரண்டு இலட்சத்தில் இருந்து பேரம்பேசப்பட்டதாகவும் இறுதியில் ஐந்து இலட்சத்திற்கு உடன்பட்டிருந்தமையும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (ந-7)

## விபரீத முடிவெடுத்த யுவதி உயிரிழப்பு

(கரணவாய்)

துன்னாலை அல்லையம்பதியில் விபரீத முடிவெடுத்து இளம் யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேதப் பரிசோதனைக்குட்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார்.

பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,60)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2025**

**“மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.”**

-[illegible]மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்தியா மின் கட்டமைப்பு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

(கொழும்பு)

முன்மொழியப்பட்ட மின் கட்டமைப்பு இணைப்புத் திட்டத்திற்கான செயற்படுத்தல் முறைகள் குறித்து விவாதிக்க இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடை யில் நேற்று முன்தினம் ஒரு மெய்நிகர் சந்திப்பு நடைபெற்றது.

இந்தியத் தரப்புக்கு மின் சக்தி அமைச்சின் செயலாளர் பங்கஜ் அகர்வால் தலைமை தாங்கினார்.

இலங்கைத் தரப்புக்கு எரிசக்தி அமைச்சின் செய லாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால தலைமை தாங்கினார்.

எல்லை தாண்டிய முக்கியமான மின் இணைப்புக்கான செயற்படுத்தல் நடைமுறைகள் குறித்து இதன்போது பிரதிநிதிகள் மதிப்பாய்வு செய்தனர்.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பிற்கு 1,000 மெகாவாட் மின் இணைப்பு திட்டம் மிகவும் முக்கியமானது.

இது பற்றாக்குறையின் போது மின்சாரத்தை இறக்குமதி செய்யவும், உபரி புதுப்பிக்கத்தக்க ஆற்றலை (குறிப்பாக காற்றாலை மின்சாரம்) ஏற்றுமதி செய்யவும் அனுமதிக்கிறது. இதன் மூலம் அந்நிய செலாவணியைப் பெறுகிறது.

இந்த இணைப்பு எரிசக்தி ஆதாரங்களை பல்வகைப் படுத்தும், மின் கட்ட நிலைத்தன்மையை மேம்படுத்தும் மற்றும் பிராந்திய மின் சந்தையில் ஒருங்கிணைப்பை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி, சட்ட மற்றும் செயற்பாட்டு கட்டமைப்புகளை இறுதி செய்வதில் தொடர்ந்து ஈடுபட இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன. (நி)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க இணக்கம்

(கொழும்பு)

பாதுகாப்பு கோரும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்க பொலிஸ்மா அதிபர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானகே தெரிவித்துள்ளார்.



எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய, உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவும் கலந்து கொண்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பாதுகாப்பு கோரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸ் மா அதிபருடன் சபாநாயகரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# மன்னாரில் கத்தோலிக்க குருவின் உடையில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த நபர் ஒருவர் கத்தோலிக்க குருக்கள் அணியும் வெள்ளை ஆடை மற்றும் கறுப்புப்பட்டி அணிந்தவராய் தன்னை ஒரு கத்தோலிக்க குருவாக காண்பித்து முத்தரிப்புத் துறை, வங்காலை போன்ற இடங்களில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபர் ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு விதங்களில் தன்னை அடையாளப்படுத்தியும் இருந்தார். சில இடங்களில் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு துறவற சபையால் குரு என்றும் கூறியுள்ளார்.அத்துடன் நானாட்டானில் உள்ள வங்கி ஒன்றில் பணத்தையும் வைப்பில் இட்டுள்ளார்.

அவர் பற்றிய தகவல் மன்னார் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் நானாட்டானில் இருந்து மன்னார் நகருக்கு பேருந்தில் பயணித்த வேளையில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் வைத்து பொலிஸார் அவரை கைது செய்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு அவரை அழைத்துச் சென்று விசாரித்த பொலிஸார் அவர் உண்மையான குரு இல்லை என்பதையும் சிறியதொரு கிறிஸ்தவ சபை உறுப்பினர் என்பதையும் உறுதிப் படுத்தினர்.அன்றைய தினம் பொலிஸ் தடுப்பில் வைத்த பொலிஸார் அடுத்த நாள் இவரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். இதேவேளை இவ்வாறானவர்கள் தொடர்பில் மக்களை விழிப்புடன் இருக்குமாறு மன்னார் ஆயர் இல்லம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (8-285)

# மணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


கோப்பாய் வடக்கு ஜே/262 கிராம அலுவலர் சுப்பிர மணியம் சண்முகவடிவேல் அவர்களின் மணிவிழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோவில் திருமண மண்டபத்தில் மணிவிழாக் குழுத் தலைவர் ச.கவிகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3337

### தாரணி




### விதுஷா




### டினோஜா




### அசானி




### பிரணவன்




### விந்துயா




ஆட்டோ நிலாவுக்கு வருமாப்பா...
வரும்....
எவ்வளவு சார்ஜ்
1200 கோடி....
என்னாப்பா இஸ்ரோ 600 கோடில போறா
நீ டபுளா கேக்கிறியே...
ரிட்டர்ன் காலியா வரனுமில்ல.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு...

இடம்பெற்ற இக்கோர விபத்துத் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கதுருவெல பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த போது, பின்னால் வந்த மற்றொரு தனியார் பேருந்து நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் பின்பக்கமாக மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த 28 பேர் சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, சிகிச்சை பலனின்றி மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் உயிரிழந்துள்ளனர்.

பின்னால் வந்த பேருந்து அதிவேகமாகப் பயணித்ததால் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை தொரடியாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## டெங்கு பரவ...

வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் பருத்தித்துறை நகர சபை ஆகிய பகுதிக்குட்பட்ட மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த வாரம் டெங்கு கட்டுப்பாட்டுக் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலைப் பேணிய 14 ஆதன உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 14 ஆதன உரிமையாளர்களும் மன்றில் முன்னிலையாகி தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து அவர்களுக்கு மன்று ஒரு இலட்சத்து 06 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (ந-7,33)

## யாழ்.பல்கலைக்...

நூலகத்தின் கூரை திருத்த வேலைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (30) முன்னெடுக்கப்பட்டது. அதன்போது கூரைக்குள் இரண்டு மகசீன்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால், கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனையடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (31) பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவின் ஒத்துழைப்புடன், மகசீன்கள் இரண்டையும் மீட்டதுடன், அதன் அருகிலிருந்து சுமார் ஐந்தடி நீளமான வயரையும் மீட்டனர்.

இதனையடுத்து கூரைக்குள் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் எனும் சந்தேகத்தில் கூரையினுள் தேடுதல் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்தவேளை, ரி - 56 ரகத் துப்பாக்கி ஒன்று, மேலும் இரண்டு மகசீன்கள், மூன்று சிறிய குண்டுகள், கிளைமோரை வெடிக்க வைக்கப் பயன்படுத்தப்படும் ரிக்னேட்டர், வயர்கள் மற்றும் காயங்களுக்கான மருந்துப் பொருட்கள், சேலைன், பஞ்சு, காயங்களுக்கு கட்டும் பன்டேஜ், இரத்தக் கறையுடனான சாரம் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்கள் அனைத்தும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இன்று (01) சனிக்கிழமை அது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அதனை அடுத்து மன்றினால் வழங்கப்படும் கட்டளைக்கு ஏற்ப அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கி மகசீன் சுற்றப்பட்டு இருந்த பத்திரிகை, சேலைன் போத்தலின் காலாவதித் திகதி என்பவற்றின் அடிப்படையில் அவை 2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் கூரைக்குள் வைக்கப்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிற நிலையில், கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,33,104)

## ஹெரோயினுடன்...

நேற்று (31) வெள்ளிக்கிழமை 25கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,30)

## குறை...

பொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்வதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்பிரகாரம், பெற்றோல் 92 ஒக்ரேன் லீற்றரின் விலை 05 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 294 ரூபாயாகும்.

அதேபோல சுப்பர் டீசல் 4 ஸ்ரார் யூரோ 4 லீற்றரின் விலை 05 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 318 ரூபாயாகும்.

ஏனைய எரிபொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ந-7)

## வீதி...

தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் - பி.ஏ.தம்பி வீதிப் பகுதியில் தனியார் வைத்தியசாலையின் மருத்துவக்கழிவுகள் கொட்டப்பட்டதாக அப்பகுதி மக்கள் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து மாநகர சபை உறுப்பினர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்டோர் அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் மருத்துவக் கழிவுகளுக்குள் காணப்பட்ட பற்றுச்சீட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த வைத்தியசாலையை இனங்கண்டு வைத்தியசாலை உரிமையாளரை விசாரணைக்கு அழைத்துள்ளதுடன் குறித்த பகுதியில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்ட விதம் குறித்தும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ந-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 5999
Y 4 8 2 3 4 9
அத சம்பத
Y 2 3 4 9
சீட்டிழுப்பு இலக்கம் 0574
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 115
துலாம் 09 57 67

தன நிதானய
திகதி - 2025.10.31
சீட்டிழுப்பு இலக்கம் - 2029
U 15 39 59 70 U

மெகா பவர்
திகதி 31/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2347
D 07 22 39 40 76

ஜய
திகதி 2025.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 0267
Y 5 7 8 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4241
சீட்டிழுப்பு திகதி 31.10.2025
Y 28 42 45 58
Y

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 1308
மேடம் 05 33 42 55 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
31.10.2025 வெற்றி வாரம் 0707
ஆங்கில எழுத்து Q
9 8 3 3 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,603,660.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2973
சீட்டிழுப்பு திகதி 2025.10.31 தினம் வெள்ளிக்கிழமை
04 21 22 78 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,443,956.00
DLB

சனிதா
திகதி 31.10.2025 வெற்றி வாரம் 5134
19 62 65 68 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,578,100.80
DLB

சசிரி
வெற்றி வாரம் 0803
31.10.2025 வெள்ளிக்கிழமை
19 32 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4685
சீட்டிழுப்பு திகதி 31.10.2025 தினம் வெள்ளிக்கிழமை
18 23 25 40 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 24 15 34 49 65
2149
31.10.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.603,922,878.80
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2799
சீட்டிழுப்பு திகதி 2025.10.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,711,896.00
09 15 66 70 B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NORTHERN UNI
SLIIT
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

IFSLS

# வடமாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு!!
## அரசாங்க வட்டியற்ற மாணவர் கடன் திட்டம் யாழ்ப்பாணத்தில்
## SLIIT NORTHERNUNI இல் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது

க.பொ.த உயர்தர (அனைத்து பிரிவுகள்) கல்வியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து அரச பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெறாத மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பினை அதிகரிக்கும் முகமாக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டதே **வட்டியற்ற மாணவர் கடன் திட்டமாகும்.**

வட்டியற்ற மாணவர் கடன் திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக வடமாகாணத்தில் SLIIT NORTHERN UNI மட்டுமே உள்ளது.

**அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமைகள்**
- 2022, 2023 மற்றும் 2024 ஆண்டு க.பொ.த உயர்தரத்தர பரீட்சையில் தோற்றியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- மூன்று முறைகளுக்கு மேற்படாத க.பொ.த உயர்தரத்தில் (அனைத்து பிரிவுகள்) ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தி (S).
- பொது அறிவில் குறைந்த பட்சம் 30 புள்ளிகள்.

**SLIIT NORTHERN UNI யில் வழங்கப்படுகின்ற முழுநேர வாரநாள் பட்டப்படிப்புகள்**

**BSc (Hons) in Information Technology, Specialising in**
- Artificial Intelligence
- Software Engineering
- Data Science
- Information Technology
- Cyber Security

**BBA (Hons), Specialising in**
- Accounting & Finance
- Business Analytics
- Human Capital Management
- Business Management
- Marketing Management
- Logistics & Supply Chain Management

**கடன் தொகை**
- தகவல் தொழில்நுட்ப கற்கைநெறிகளுக்கு ரூபா.1,000,000.00 வட்டியற்ற கடன்.
- வியாபார முகாமைத்துவ கற்கைநெறிகளுக்கு ரூபா.900,000.00 வட்டியற்ற கடன்.
- பட்டகற்கையினை 4 வருடங்களில் பூர்த்தி செய்த பின்னர் 1 வருடம் சலுகைக் காலமாக வழங்கப்படும்.
- அதனை அடுத்து வரும் 8 வருடங்களில் கடன் மீள் செலுத்தப்படுதல் அவசியம்.
- கல்வியை தொடரும் காலத்தினுள் கடனை மீள செலுத்த தேவையில்லை.
- மேலதிக கொடுப்பனவாக வருடத்திற்கு ரூபா.75 000 பெற்று கொள்ளவும் முடியும்

(C-4227)

விண்ணப்பங்கள் ஆரம்பமாகும் திகதி
**01.11.2025**

விண்ணப்பங்கள் முடிவு திகதி
**30.11.2025**

**விண்ணப்பிக்கும் முறை**
- SLIIT NORTHERN UNI இல் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு: northernuni.lk/application-form
- கடன் திட்டத்திற்கு: www.studentloans.mohe.gov.lk

Interest Free Student Loan Scheme
MINISTRY OF EDUCATION, HIGHER EDUCATION AND VOCATIONAL EDUCATION
980/4A, Wickramasinghe Place, Ethul Kotte
Director: 011 2879 724
Student Loans Division: 011 2879 727
Email: dsls@mohe.gov.lk
Website: www.mohe.gov.lk

021 7534 807
northernuni.lk | admissions@northernUni.com

SLIIT NORTHERN UNI, 239 அரசடி வீதி, கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்



## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
ஆண், பெண் இருபாலாரும் வழங்கலாம்.
HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.
076 540 6732 (Whatsapp/ Call)
077 656 0222
(5769)



## பௌதிகவியல் (A/L)
2026/ 2027/ Repeat
தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்
- பாடத்திட்டப்படி அலகுகள் பூர்த்தி செய்தல்
- மீட்டலும் கடந்தகால வினாக்களும்
- ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சிகள்
- மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம்

Home Visit Available
ஆ.நித்தியானந்தன் BSc, Dip-in-Ed
076 799 9005
15, பழம் வீதி, கந்தர்மடம்
(5756)



## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



## யாழ்ப்பாணத்தில் Voyzant
### சுற்றுலாப் பயணம்
மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.



மேலதிக விபரங்களுக்கு : Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(5725)



## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3670/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2440/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4232)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237



## கந்தர்மடம் (கந்தர்மடச் சந்தி) KBK கொழும்புத்துறை (சுவாமியார் வீதி)
கணக்கீட்டு வளவாளர்
**திரு.க.பா.பாலகஜன் SLTS**
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
**A/L 2026, A/L 2027**
Theory, Paper Class, Zoom online Classes
- தவணைப் பரீட்சையில் குறைவான புள்ளிகள் எடுத்தும் மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்
- உங்களுக்கு வசதியான நேரத்தில் வகுப்புக்கள் நடைபெறும்.
- A/L 2026 மாணவர்கள் A/L 2027 மாணவர்களுடன் இணைந்து கற்க முடியும்.

ஆரம்பம் : 03.11.2025 திங்கள் மாலை 03.00 மணி
077 4520 043
(C-4224)



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 193/= | Max 1Kg |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 153/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 225/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 269/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை(உள்நாடு) | - 210/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 205/= | |
| 1Kg தீட்டல் பச்சை ஆட்டக்காறி | - 239/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌபி | - 995/= | |
| 1Kg உளுந்தம் பருப்பு | - 999/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ | |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.
(5698)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30



## உடனடி வேலைவாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-4232)

V2 TRAVELS 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com



## வேலைவாய்ப்பு
எமது வெளியீட்டு நிறுவனத்திற்கு
- கணனி தட்டெழுத்தாளர்
- வடிவமைப்பாளர்
- புத்தகம் கட்டுனர்

தேவை. EPF + திறமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.
0777 111 212
(5787)



## பணிப்பெண் தேவை
நெல்லியடி கரணவாய்ப் பகுதியில் வசித்துவரும் வயோதிபப் பெண்மணியைத் தங்கியிருந்து பராமரிப்பதற்குப் பணிப்பெண் உடன் தேவை.
(வயது எல்லை : 40 - 55)
தொடர்புகளுக்கு :
0777 84 75 83
(5783)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org